தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 நளி (30-௧௧-௮௯) ஓர் உருபா (இதழ் எண்: 131

தி.மு.க.வின் வெற்றிக்கெல்லாம் தமிழின் நலவுணர்வே காரணமாக இருந்தது! ஆனால், அதன் தோல்விக் கெல்லாம் கலைஞரின் அணுகுமுறையே காரணம்!

கட்சிக்குத்தான் கலைஞர் துணையாக இருக்க வேண்டும்! கட்சியைத் தமக்குத் துணையாக்கிக் கொள்ளக் கூடாது!

தனிப்பட்ட கலைஞரை மக்கள் வெறுக்கத் தொடங்கி விட்டதே தோல்விக்குக் காரணம்!

அவரின் விளம்பரப் பேராசை, ஆரவாரத்தனம், அறிஞர்களை மதியாமை, திரைப்பட ஈடுபாடு, மக்களைக் கவர்ச்சித் திட்டங்களால் ஏமாற்றுதல், போலித் தமிழ்ப் பற்று-ஆகியவையே கலைஞரின் எதிரிகள்!

பாராளுமன்றத் தேர்தல் நாடகம் முடிந்தது. தென்மாநிலங்களில் தேசிய இன மாநில அரசுகளுக்குப் பெருத்த சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த வரை, கலைஞர் கருணாநிதிக்குச் சாவு அடியே கிடைத்துள்ளது. ஏற்கனவே குற்றுயிருமாய்க் குலையுயிருமாய்க் கிடந்த அவரின் பாராளுமன்ற உயிர்ப்பாட்டம் இந்தத் தேர்தலில் அடி அடங்கி ஒடுங்கி விட்டது. இனி அவர் தில்லிப் பக்கம் போவதற்கும் வாய்ப்பில்லாமல் மக்கள் அவருக்கு இழிவையும் முடிவையும் தேடிக் கொடுத்து விட்டனர், இனி, அவரது மாநில அமைச்சர் அவைக்கும் முடிவு தொலைவிலில்லை என்னும் நிலையேற்பட்டு விட்டது. என் செய்வது? தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்னும் இயற்-

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

விடுதலை விரும்பிக்குத் தந்தை விடுத்த விடை!

மடல் : 1

சென்னை-5.
3-1-1989

பேரன்பின் இனிய மகன் பொழில்!

நலமே விளைக. உன் நலமும் முகில், இளங்கோ ஆகியோர் நலமும் அடிக்கடி தெரிவி. உன் அனைத்து மடல்களும் கிடைத்து வருகின்றன. விடையெழுத, நேரத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. படிக்கவும் எழுதவும் ஏன் தூங்கவும் கூட நேரம் கிடைப்பதில்லை. இ'து எனக்கமைந்த உயிர் வாழ்வின் நிலை. இதற்காக யாரையும் நொந்து கொள்வதில் பயனில்லை. இயற்கை எனக்கிட்ட வாழ்வியல் அமைப்பு இப்படித்தான் இருக்கும் என்று எண்ணி அமைதியுறுவதைத் தவிர வேறு வழியில்லை.

இம் மடல், உன்னிடமிருந்து இறுதியாக, இன்று வந்து கிடைத்த 31-12-88-ஆம் நாளைய மடலைப் பார்த்த பின் எழுதுவது. உன் முன்னைய இரண்டு மூன்று மடல்களுக்கும் விடையெழுத எண்ணிக் கொண்டிருந்தும் எழுத இயலவில்லை. இயலாத அந்த நிலைகளையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்கவும் நேரமில்லை.

நீ என்னைப் பற்றி எவ்வாறு கருதிக் கொண்டிருக்கின்றாயோ, அவ்வாறு மட்டும் நான் இருக்கவில்லை—இருக்கவும் இயலாது—என்பதை நீயும், மற்ற அனைவரும் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் விளங்கிக் கொள்ள முடியாததே அனைவர்க்கும் இயலாததாய்— இயல்பானதாய்-இருக்கிறது.

முதலில் என் உணர்வு நிலை வேறு; அறிவு நிலை வேறு; செயல் நிலை வேறு. இம்மூன்று நிலைகளிலும் ஒன்றுபட்டு இயங்கும் இயக்கம் வேறு; வேறுபட்டு இயங்கும் இயக்கம் வேறு.

உலகியல் நிலையில் மட்டுமே என்னைப் பொருள் கொண்டு பார்க்கும் அனைவரும், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்' 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்'—என்னும் மெய்ப்பொருள் நிலையில் விளங்கிக் கொள்ளாமல் இருப்பது வியப்பன்று. அதுவும் நான் உணர்ந்ததே! அவ்வாறு உணர்ந்ததால்தான், நான் உலகியலில் மனைவிக்குப் பொதுவான அல்லது சிறப்பான ஒரு கணவனாகவும், பிள்ளைகளுக்குப்பொதுவான அல்லது சிறப்பான ஒரு தந்தையாகவும், உடன் பிறப்புகளுக்குப் பொதுவான—சிறப்பான அன்று—ஓர் அண்ணனாகவும், என்னைப் பெற்ற தாய்க்குப் பொதுவான அன்று-சிறப்பான ஒரு மகனாகவும், பிறர்க்குப் பொதுவான—அல்லது சிறப்பான ஓர் ஆளாகவும்-இருந்து வர முடிகிறது.

பொழில்! உன் இயல்பான மடல்களுக்கு இது நாள் வரை இயல்பான விடைகள் எழுதிக் கொண்டிருந்தேன். இன்றைய உன் மடல் ஒரு வேறுபாடான ஒரு மடல். எனவே இதுவரை இல்லாத ஒரு வேறுபாடான விடையை எழுதும்படி என் உள்ளத்துப் பூத்துக் கிடக்கும் சாம்பல் குவியலைக் கிளறிவிட்டு விட்டாய். எனவே உள்ளே அவியாது கனன்று கிடக்கும் நெருப்புப் பொறிகள் இம்மடலைச் சூழ்ந்து கொண்டன. அவை உன்னையும் சுட்டுப் பொசுக்கி விடக் கூடாது என்றே இறையருளை வேண்டி இதை எழுதுகின்றேன்.

அன்பு மகனே! பொழில்! உன் இன்றைய மடலில் எனக்கு அறிவுரைகள் நிறைந்து வந்திருக்கின்றன. இல்லையானால் நான் சுமந்து வரும் இவ்வச்சகப் பணிச் சுமையை எல்லாரும் செய்து வருவது போன்ற ஒரு தொழில் என்று மதிப்பீடு செய்திருக்க மாட்டாய். அதுபோலவே எல்லாரும் எழுதுவது போன்ற வெற்றிலக்கியங்கள் என்று மதித்துப் பேசியிருக்க மாட்டாய். 'தனிமாந்த உணர்விலக்கியங்கள்' என்று 'ஐயை'யையும், 'பாவியக்கொத்தை'யும், 'எண் சுவை என்பதை'யும் நான் அன்றைக்கு எழுதியவற்றை—உன்னிலும் சிறிய அகவைப் பொழுதில் எழுதிய—அவற்றை- இன்றைய என் வளர்ச்சி நிலையாகக் கருதிப் பேசியிருக்க மாட்டாய். அவை தனிமாந்த உணர்விலக்கியங்களாக இருந்தால் என்ன? தனி மாந்த உருவாக்கத்தில்தான் பொது மாந்த உருவாக்கமும் அமைந்து கிடக்கின்றது என்பதை இன்னும் நீ விளங்கிக் கொள்ளாமல் இருப்பது எனக்கு வியப்பாய் இருக்கிறது. பொது மாந்த உருவாக்கமும் தனிமாந்த வளர்ச்சிக்குத் தானே! ஆறாக நீர் ஓடிக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு கையாக அள்ளி அள்ளித்தானே நாம் பருகியாகல் வேண்டும். ஒரு குவளை நீரையே நான் படைத்திருந்தாலும், அது ஆற்றுநீரின் ஒரு பங்குதானே! இவ்வுலகில் எந்த ஒரு பொருளும்—ஓர் உயிரும் தனித்தனியான ஒன்றே! அதே பொழுது அவ்வொன்றும் ஒரு கூட்டத்தின் ஒரு பகுதியே!

ஒரு பெரிய நூலை-ஒரு பாவியத்தை-எவ்வகையான உணர்வோடு நாம் படிக்க முயன்றாலும்-அதை ஒவ்வோர் எழுத்தாக ஒவ்வொரு சொல்லாக-ஒவ்வொரு வரியாக-ஒவ்வொரு பக்கமாகத்தான் படித்து முடிக்க வேண்டும் என்பதை இன்னுமா நீ விளங்கிக் கொள்ளவில்லை?

'அச்சகம் நடத்துவது ஒரு தொழில்—அது தொண்டாகி விட முடியாது' என்று எனக்கே உண்மை சொல்லுமாறு முனைந்த உன் உணர்வு

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையின் முடிவுப்படி அவர் விதைத்த வினையை அவரே அறுத்துள்ளார். மற்றபடி, அவர் தேடிக் கொண்ட இம் முடிவுக்கு செயலலிதாவோ, வாழைப்பாடி இராமமூர்த்தியோ, தமிழ்நாட்டு மக்களோ காரணம் ஆகார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அதை ஒரு தமிழின நலவுணர்வுக் கட்சி-யாகத்தான் தமிழர்கள் அனைவரும் கருதிக் கொண்டிருந்தனர். ஆனாலும் கலைஞர் தலைமைக்குப் பின்னர் அது கலைஞர் குடும்ப நலக் கட்சியாகத்தான் உள்ளும் புறமும் விளங்கியது என்பதை அக் கட்சியில் உள்ள பெரும்பாலார் உள்முகமாக உணர்ந்து மறுகவே செய்தனர். வெளிப்படை-யாகச் சொல்லப் போனால், கலைஞரால் அக்கட்சி எந்த அளவுக்கு நலமும் வளமும் பெற்றதோ, அதற்கதிகமாகவே, அக் கட்சியால் கலைஞர் பல வகையிலும் நலமும் வளமும் பெற்றுப் பத்து, நூறு மடங்காகத் தம்மை வளர்த்துக் கொண்டார். அதனால், கட்சி அளவில் கலைஞர் தாம் நினைத்ததை அழுத்தமாகவும் வலித்தமாகவும் செய்து கொள்ள முடிந்தது. தமக்கு விருப்பமானவர்களையும், தமக்குக் கட்டுப்பட்டுத் தம் கண்ணசைவிற்கு இசைந்து நடப்பவர்களையும், அவர்களால் தமக்கு நன்மையே தவிர, தீங்கில்லை என்று கருதப்பட்டவர்களையுமே அவர் தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அவர்கள் வளரவும் வாழவும் அனைத்து ஆதரவுகளையும் தந்தார்; அவர்களால் தம்மையும் பெருவலிவுள்ளவராக வளர்த்தெடுத்துக் கொண்டார். அதே பொழுதில், அவருக்கு விருப்பமில்லாதவர்களையும், தமக்கு மேலாகத் திறமையும் அறிவும் உடையவர்களையும் தம் தனிப்பட்ட போக்குப் பிடிக்காதவர்களையும், தமக்கு மாறாகச் சிந்திப்பவர்களையும் அவர் எம்ப-விடாமல் மட்டந்தட்டியே வைத்திருந்தார். முடிந்தால் அத்தகையவர்களைத் தம் ஆட்சி எல்லைக்குள்ளிருந்து வெளியே அப்புறப்படுத்தவும் செய்தார். புறநிலையில், பெயருக்கு அக்கட்சியை ஒரு குடியரசு அமைப்புடையதாக மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டாரேயொழிய, அகநிலையில் அவர் ஒரு வலிந்த தன்னதிகார மூப்பராகவே நடந்து வந்தார் என்பதை அவர் அகப்புறம் அறிந்த எவரும் மறுக்க இயலாது.

இந்த நிலையில், அவர், ஒரு தன்முனைப்புள்ள-வராகவும் அளவுக்கு மீறிய விளம்பர விருப்பமுள்ள-வராகவும், பேச்சிலும் எழுத்திலும் ஆரவாரமும் அகங்காரமும் கொண்ட நடையுள்ளவராகவுமே தொடர்ந்து நடந்து கொண்டார். ஆனாலும் கழக வளர்ச்சியில் அவர் காட்டிய உழைப்பும் ஊக்கமும் அக்கறையும் ஆர்வமும் வேறு எவரும் காட்ட-வில்லையாதலாலும், அக்கழக வளர்ச்சி தமிழின முன்னேற்றத்திற்கும், ஓரளவு தமிழ்மொழி உணர்வுக்கும் மிக மிகத் தேவையென்று தமிழ் மக்களும் தமிழின நலம் கருதும் அறிஞர்களும், தொண்டர்களும் அழுத்தமாகக் கருதியதாலும், அவரின் கட்சியையும், அதன் முழுநேர உழைப்-பாளராகிய அவரையும் வரவேற்கவே செய்தனர். கட்சியின் மூல இயக்கம் அவரின் கைகளில் சிக்கி-யிருந்ததால், தமிழினப் போராட்டத்திற்கு அவரும் தேவைப்பட்டார்; அவர் கட்சியும் தேவைப் பட்டது. அதனால் அவரும் அவர் கட்சியும் தேர்தலில் நின்ற பொழுதெல்லாம் அவர் வெற்றி பெறுவதை அவர் இயக்கத்தவரை விட, அவர் இயக்கத்தைச் சாராத நடுநிலைத் தமிழர்கள் உவந்தும் வலிந்தும் வரவேற்றுக் கொண்டிருந் தனர். அத்தகைய வரவேற்புக்கும், அதனால் கிடைத்த இடைக்கால வெற்றிகளுக்கும் தாமே காரணம் என்று தவறாகக் கருதிக் கொண்டிருந்தார் போலும்! எனவே, அவ் வெற்றிக் களிப்பையெல்லாம் அவர் தம் அறிவுக்கும் திறமைக்கும் சூட்டிக்கொண்ட பெருமையாகவும் பெருமிதமாகவும் கருதிக் கொண்-டார். அதனால் அவர்க்குச் செருக்கு மிகுந்தது; சீற்றம் நிறைந்தது; எக்களிப்பு ஏற்றமுற்றது.

இவ் வேறுபட்ட மனவுணர்வில், தி. மு. க.-வுக்குக் கிடைத்த வெற்றிக்கெல்லாம், தமிழின நலவுணர்வே காரணமாக இருந்தது என்பதை அவரால் உணர முடியவில்லை. அதே போல், அக் கட்சியின் தோல்விக்கெல்லாம் அவரின் தவறான அணுகு முறையே காரணம் என்பதையும் அவர் அறியவில்லை. அதனால்தான், 'முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டி வைத்தேன். இரண்டு குளபாழ்; ஒன்றில் தண்ணீரே இல்லை'' என்னும் நிலைக்கு அவரும் அவர் கழகமும் ஆளாக வேண்டி யிருந்தது.

அவர் வெற்றி இனத்தின் வெற்றி! அவர் தோல்வி அவரின் தனிப்பட்ட தோல்வி என்று அவர் அறிதல் வேண்டும். கட்சிக்குத்தான் கலைஞர் துணையாக இருக்க வேண்டுமே தவிர, கட்சியைத் தமக்கும் தம் குடும்பத்திற்கும் துணையாக்கிக் கொள்ளக் கூடாது. இதையெல்லாம் கலைஞர் தம் நெஞ்சில் கை வைத்துக் கொண்டு படித்தால் விளங்காமல் போகாது!

இப் பாராளுமன்றத் தேர்தலில் அவர் வீழ்ச்சி-யடைந்தது, முழுக்க முழுக்க அவருடைய தோல்வி! தனிப்பட்ட கலைஞரை மக்கள் வெறுக்கத் தொடங்கி விட்டதே அவர் பெற்ற தோல்விக்குக் காரணம்! தொலைக்காட்சியில் இராசீவின் தகர முகத்தை அன்றாடம் பார்த்துப் பார்த்து மக்கள் அவரை வெறுத்தார்கள் என்றால், கலைஞரின் நாடக முகத்தை தமிழகத்தில் உள்ள சுவர்கள் தோறும் பார்த்துப் பார்த்து முகஞ்சுளித்து வெறுத்தார்கள்.

மொத்தத்தில், அவரின் விளம்பரப் பேராசை, அதிகாரச் செருக்கின் ஆரவாரத்தனம், உண்மை அறிஞர்களை அவர் மதித்துப் போற்றிக் கொள்ளாமை, அவரின் அளவிறந்த திரைப்பட ஈடுபாடு,

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

எங்கும் கையூட்டு! எதிலும் கையூட்டு!

கோ. இரவிச்சந்திரன்

தாங்கள் அண்மையில் "தென்மொழி" இதழில் "கையூட்டைப்" பற்றிப் பாடலொன்று எழுதியுள்ளீர்கள். அப் பாடல் இக்காலச் சூழலைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அது தொடர்பாக என் எண்ணங்களை எழுதுகின்றேன்.

கையூட்டு என்பது இக்காலத்தில் இல்லாத துறையே இல்லை என்று கூறிவிடலாம். சுருக்கமாகக் கூறினுல் எழுதப்படாத—சட்ட முறையாக மட்டுமே ஒப்புக் கொள்ளப்படாத—எல்லோராலும் பின்பற்றப்படக்கூடிய — ஒரு நடைமுறையாக மாறிவிட்டது. குமுகாய முறையில் பிற்படுத்தப்பட்டும் தாழ்த்தப்பட்டும் உள்ள மக்கள் அதன் காரணமாகவே பொருளியலில் நலிந்துள்ளனர். அப்படிப்பட்ட ஏழை மக்களுக்குக் கையூட்டினுல் ஏற்படும் துன்ப துயரங்கள் சொல்லி முடியாது. ஆனுல் கையூட்டு வாங்குபவர்களோ இது பற்றியெல்லாம் கவலைப்படுவதாகத் தெரிவதில்லை.

பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்து எப்படியோ மேல்நிலைக்கு வந்தவர்களும், தங்களின் முந்தைய நிலையறிந்து. அது போன்ற நிலையிலுள்ளவர்களைச் சிறிதும் எண்ணிப் பாராமல் கையூட்டிலேயே கவனம் செலுத்தும் நன்றி கெட்டவர்கள் இங்கு ஏராளம். திருவள்ளுவப் பெருந்தகை கூறியுள்ள

'சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட் கலத்துணீர் பெய்திரீஇ யற்று"

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம்"

போன்ற வாழ்வியல் நெறிமுறைகளை யாரும் பின்பற்றுவதாகத் தெரிவதில்லை. அப்படிப் பின்பற்றுபவர்களும் "இளித்த வாயர்களாக" "ஏமாளிகளாகவே" கருதப்படுகிருர்கள். இவ்விடத்தின்கண்,

"குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் திருட்டு
உலகமடா!—இது
கொள்ளை அடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா!"

என்ற பாடலே நினைவுக்கு வருகிறது.

புனிதமாகக் கருதப்படுகின்ற கல்வித் துறையிலும் கையூட்டின் புழக்கம் அதிகமாகி விட்டது. கல்வி என்ற போர்வையில் செய்யப்படுகின்ற முறைகேடுகளுக்கும் ஞாயமற்ற நிலைகளுக்கும் அளவே இல்லை. வீதிக்கு வீதி தனியாரின் கல்விக் (கடைகள்) கூடங்கள்!

பத்துப்பேர் ஒண்டுவதற்குக் கூட இடமில்லாத இடத்திலெல்லாம் தனியார் பள்ளிக் கூடங்கள். அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் எப்படியோ அரசு அனுமதியும் பெற்று விடுகின்ருர்கள்- இந்த நிலையில் ஆங்கில வழிக் கல்வி வேறு. "அம்மா" "அப்பா" என்று கூடச் சரியாகச் சொல்ல வராத குழந்தைகள் எல்லாம் "மெட்ரிகுலேஷன்" பள்ளியில் படிக்கிருர்களாம். அவர்கள் எப்படித்தான் ஆழ்ந்த சிந்தனையும் நுண்ணறிவும் பெறுவார்களோ? இப்படிப்பட்ட தன்னிலைக் கல்லூரிகளும் கல்விக்கூடங்களும் கொள்ளை ஊதியம சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இயங்குகின்ற அவலநிலை உள்ளங்கைப் புண்ணுக இருந்தும் அரசினராலேயோ வேறு அமைப்புகளாலேயோ ஒழிக்க முடியவில்லையே!

தனியார் பள்ளிகளின் நிலைமை இப்படியென்ருல் அரசினர் கல்விக் கூடங்களின் நிலையோ அதனினும் பன்மடங்குக் கீழ்மையாக உள்ளது! ஆசிரியர்களே பள்ளிக்கு வராமை, வந்தாலும் பாடம் எடுக்காத தன்மை, தேர்வுகள் வைக்காமலே மாணவர்களுக்கு மதிப்பெண்கள் போடுதல், பள்ளிக்கு வந்து வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டுத் தங்களின் சொந்த வேலைகளைக் கவனிக்கச் சென்று விடுதல்—போன்ற முறைகேடுகள் நடக்கும் இடங்களாகவே அரசுப் பள்ளிகள் உள்ளன. மனச்சான்றை விற்றுவிட்டவர்களும் நாணயமற்றவர்களும் உலவும் இடமாகவே அரசுப் பள்ளிகள் மாறி விட்டன. இவற்றையெல்லாம் நேரிலே கண்டு அளவு கடந்த மனத்துயருடன் எழுதுகின்றேன். இப்படி எங்குப் பார்த்தாலும் தனியார் கல்விக் கடைகள்(!)இயக்கம் முடங்கி விட்ட அரசுப் பள்ளிகள்! இப்படிப்பட்ட நிலையிலிருந்து வரும் மாணவர்கள் எப்படி எதிர்காலத்தில் நல்லவர்(யோக்கியர்)களாக நடந்து கொள்வார்கள்? கல்வியை விலைப்பொருளாக வாங்கியவர்கள் தாங்கள் வேலைக்குச் சேர்ந்ததும் "கையூட்டுக்கு" அலையோ அலை என்று அலைகிருர்கள்.

ஆங்காங்குள்ள வட்டாட்சியர் (தாசில்தார்) அலுவலகங்களைக் "கையூட்டு நடுவங்கள்" என்றே கூறி விடலாம். யாராக இருந்தாலும் கையூட்டு இல்லாமல் ஒன்றையும் எந்த ஒரு வட்டாட்சி அலுவலகத்திலும் பெற முடியாது. சட்ட திட்டங்களையும் நெறி முறைகளையும் முறைகேடாகத் தளர்த்தித் தனக்கு வேண்டிய செயலைச் செய்து கொள்பவனிடத்திலிருந்து மட்டும் கையூட்டுப் பெறப்படுவதில்லை இயல்பாக ஒருவன் செய்ய வேண்டிய—அவனுக்கு இடப்பட்டுள்ள அல்லது எதற்காக அவன் ஊதியம் வாங்குகின்ருனே—அந்தப் பணிக்கே கூடக் கையூட்டுப் பெறுகின்ருன். படித்துப் பட்டம் பெற்று வேலையில் அமர்ந்துள்ளவர்களே கையூட்டுக்கு அலைகின்றனர்.

கையூட்டின் அளவோ மாத ஊதியத்தின் அளவைவிடப் பன்மடங்கு இருக்கும் போலிருக்-

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு வேடிக்கையாக உள்ளது. மற்றவர்க்கு அது தொழில். என்னைப் போல் உள்ளவர்க்கு அதுவே தொண்டு. எழுத்தில் தீமைகளையும் வடிக்க முடியும். நன்மைகளையும் எழுத முடியும். அதால் விளைகின்ற பயன் நோக்கியே அவ்வெழுத்து மதிப்பிடப் பெறும் என்பதை நீ உணராதது-ஏன்?

தென்மொழி அச்சகம்-வெறும் தொழில் நிறுவனம் என்று நீ இதுநாள் வரை கருதிக் கொண்டிருக்கிறாய்? அவ்வாறானால் அதில் வெறும் திருமண அழைப்புகளும், கருமாதி அட்டைகளும், வெறும் விளம்பர அறிக்கைகளும், கதைகளும், கதைப்புகளுந்தாமே—காசுக்கென்று அச்சாகிக் கொண்டிருக்க வேண்டும். அவற்றை அச்சிட்டுப் பணம் பண்ணவா நான் அச்சகம் போய் வருவதாக நீ இத்தனை நாள் கருதிக் கொண்டிருந்தாய்?

ஒரே வகையான உணவைத்தான் நாம் அனைவரும் உண்கிறோம். ஒருவனிடம் அ.்து அறிவாக மலர்கிறது. இன்னொருவனிடம் அது வெறும் மலமாக வெளியேறுகிறது. வேறொருவனிடம் அது வீரமாக விளைகிறது! மற்றொருவனிடம் அது கயமையாகக் கால் கொள்ளுகிறது. அதனால் ஓர் அறிஞனின் உணவும், ஒரு முட்டாள் உண்ணுகின்ற உணவும், ஒரே மாதிரியாக இருந்தாலும், அவை இரண்டும், அவ்வப் பயன் நோக்கி வேறு வேறாக மதிப்பிடப் பெற வேண்டும்—இல்லையா? இது இவ்வளவில் இருக்கட்டும்.

அடுத்து, உன் மடலில், "அச்சகத்தை...... வேறு யாரையாகிலும் கவனிக்கச் சொல்லித் தாங்கள் கிழமைக்கொரு முறையோ, இருமுறையோ, மேற்பார்வையிட்டுக் கவனித்துக் கொள்ளலாம்" என்று பிதற்றியிருக்கின்றாய்.

நான் அச்சகத்திற்கு வருவதும் போவதும் என் விருப்பமாக நடப்பதாக நீயும் பிறரும் தவறாகக் கருதியிருப்பதாய்த் தெரிகிறது. வேறு வழியில்லாமலேயே நான் வருகிறேன்; போகிறேன். நீ இங்கு இருந்த பொழுது கூட நான் வராமலிருந்தது, நீ அடிக்கடி மூலங்களையும் மெய்ப்புகளையும் அச்சுப்படிவங்களையும் ஐயங்கள் நேரும் பொழுதெல்லாம் வீட்டுக்குக் கொண்டு வருவதற்கும் கொடுத்தனுப்புவதற்கும் ஏற்றபடி வீடு நடைத் தொலைவில் இருந்ததால்தான், முடிந்தது. அவ்வாறு இல்லாமலிருந்தால் எப்படி முடிந்திருக்கும் என்று ஒரு கணம் கண்களை மூடிக் கொண்டு எண்ணிப் பார். அச்சகத்திற்கு என் தேவை (வெறும் அச்சகம் அன்று; தென்மொழியின் படைக்களம் அச்சகம் என்று எண்ணு.) தொடக்கத்திலிருந்து இன்றியமையாது இருந்ததால்தான் அச்சகமும் வீடும் ஒன்றாக இருக்குமாறு அமைத்தேன். அதில் எனக்குப் பெருந்தொல்லை என்றாலும், தென்மொழிக்குப் பயன் என்று கருதி, என் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டேன். நீ அச்சகத்திலிருந்த பொழுது, என் ஈடுபாடு பகுதியாகக் குறைந்திருந்ததே தவிர, அறவே இல்லாமற்போய் விடவில்லை. ஆனால், நீ இருந்த பொழுதும் தென்மொழி ஒருவாறு நடந்து வந்தாலும், அலுவலகக் கணக்கு முறைகள் அச்சக அடிப்படை நிலைகள் பெரும்பாலும் சிதைவுற்றே இருந்தன. அவற்றை, நீ இப்பணியினின்று நீங்கிய பின்னர், சரி செய்வதற்கே ஆறு மாதங்கள் ஆயின. இதையெல்லாம் நான் ஒரு பேச்சுக்காகச் சொல்வதாய்க் கருதிவிட மாட்டாய் என்று நம்புகின்றேன். அவ்வாறு நீ கருதுவதானால், நீயும் என்னை இன்னும் நம்பவில்லை என்றே மதிப்பிடுவேன்.

இனி, "இப்பொழுள்ள நிலை மிகவும் சுமையானது; தென்மொழியையும் இனி நடத்துவது தேவையற்றது—என்றவாறு கருதி, ஒருவேளை அச்சகத்தை விற்று விட்டு, நீ கூறியதுபோல், அதன் தொகையை வைப்பகத்தில் இட்டு, அதன் வட்டியைக் கொண்டு நூல்களை மட்டும் (இதழ்களையன்று) அச்சிட்டுக் கொண்டு வரலாம் என்றும் நான் எண்ணிப் பார்த்ததுண்டு. ஆனால், இதழ்கள் இல்லாமல் நூல்களும் விலை போகா; நாமும் இருந்தும் இல்லாதது போல், ஒரு கருத்தையும் பரப்ப முடியாமல் வெறுமனே இருந்து கொண்டிருக்க வேண்டும். தென்மொழி ஓர் ஆடு களம். அஃதில்லையானால் நம் கருத்துகள் நம்மோடுதான் மடிய வேண்டியிருக்கும்.

இனி, நம் தென்மொழியன்பர்கள் என்று நீ யாரைத் தேர்ந்து விட முடியும் என்று நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. என் அரத்தத் தொடர்புடைய நீங்களே தென்மொழி அன்பர்களாக இல்லாத பொழுது வேறு யாரை நம்பி, நான் எதைச் செய்து விட முடியும் என்று கருதுகிறாய்?

பொழில்!

இறுதியாக உனக்கு இம்மடலில் சொல்ல வேண்டுவதாக நான் கருதிய சில கருத்துகளைக் கூறிவிட விரும்புகிறேன்.

ஓர் இலக்கிய ஆசிரியன் புதிதாக இங்கு வந்த பின் உருவாவதில்லை. அவன் ஏற்கனவே வித்திடப் பெற்று மரமாக முளைத்தவன். அந்த மரத்தில் என்ன பூக்கும், என்ன காய்க்கும், என்ன பழுக்கும் என்பதெல்லாம் விதையைப் பொறுத்த செய்தி. அதை மாற்ற யாராலும் முடியாது. அவனை இதைப் பாடு, அதைப் பாடு என்பதெல்லாம் வீண் முயற்சி. அ.்து, ஒரு மரத்தை நோக்கி இந்தப் பூவைத் தா. இந்தப் பழத்தைக் கொடு என்று நம் விருப்பத்திற்குக் கேட்பதைப் போன்றது. அவன் உள்ளத்தை எது கவர்கிறதோ, வெகுவாக ஆட்கொள்ளுகிறதோ, அ.்து ஒரு கல்லானாலும், மண்ணானாலும்

Scanned with CamScanner

தேர்தல் நேரத்தில் வெளியிட்ட கருநாடகத் தமிழர் அறிக்கை!

கருநாடகத்தில் 'தமிழனின் உரிமைகள்' உறுதி செய்யப் பட வேண்டும்

கருநாடகத்தில் காலங் காலமாய் வாழுகின்ற 42 இலக்கம் தமிழர்கள் மீது இந்தி(ய)த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கெல்லாருக்குந் தேர்தல் நேரத்தில் "திடீர்ப்பாசம்" பொங்கிப் பொங்கி வழியத் தொடங்கி விட்டது.

வழக்கம் போல் "கூலிக்குக்" "கொடிதாக்கவும்", தோரணங்கள் கட்டவும், வீதிக்கு வீதி மேடைகள் அமைக்கவும், வீட்டுக்கு வீடு ஏறி-இறங்கிப் "பல்லிளிக்கவும்", "கை"கூப்பவும்,—தேவைப்பட்டால் பொது மக்களின் கால்களிலெல்லாம் விழுந்து விழுந்து—எழுந்து வணங்கவும், அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களுக்குமே இப்போது மட்டும் "தமிழர்களின்" உதவிகள் கட்டாயம் தேவை தானே?...ஆனால்,

இதற்கு முன் கன்னடவெறிக் "காடை"—களாலும், காவல்துறைப் "பீடை"களாலும், கருநாடகத் தமிழர்கள் சரமாரியாக "உதைக்கப்பட்ட போதும்", தமிழச்சிகள் "வதைக்கப்பட்டபோதும்". தகுதிகள் இருந்தபோதிலும், தமிழிளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டபோதும், இந்த "முழுத்தேசிய", முக்கால்தேசிய", "அரைத் தேசிய", "அரைக்கால் தேசிய"க் கட்சித் தலைவர்கள் எல்லாரும் எங்கே போய்ப் "புகுந்து" கொண்டிருந்தார்கள் என்பதைக் கருநாடகத் தமிழர்கள் யாருமே மறந்துவிடவில்லை!

எனவேதான், இந்தத் தேர்தலில் போட்டியிட-வருக்கும் கட்சி அரசியலாளிகளைத் திட்டவட்ட-மாகவே எச்சரிக்க விரும்புகிறோம்.

"தமிழர்களை" வெறும் கூலிக்காரர்களாக்கி, "வேலை" வாங்கிவிட்டுத் தேர்தல் முடிந்த பிறகு "மூலைக்குத்" தள்ளிவிடுகின்ற போலித்தனங்களுக்கும் நீலித்தனங்களுக்கும், புரட்டுத்தனங்களுக்கும் திருட்டுத்தனங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள்.

தமிழர்களின் "உரிமைகளுக்கு" மதிப்பளித்துப் பெருமைப்படுத்துங்கள்.

உங்களின் "தேர்தல் வெற்றி"களுக்குத் தமிழர்களின் உதவிகள் தேவையென்றால், முதல் கட்டமாகத் தமிழர்கள் அதிகமாக வாழுகின்ற தொகுதிகளில் மட்டுமாவது, சூடு சுரணையுள்ள-தகுதியுள்ள—தன்மானவுணர்வுள்ள "தமிழர்களையே உங்கள் கட்சிகளின் "வேட்பாளர்களாக்குங்கள்.

அப்படிச் செய்யாமல், வெறும் "வாய்-உறுதி" களாலும் "கை"யுறுதிகளாலும் மட்டுமே தமிழனை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தால், இறுதியில் நீங்கள் உறுதியாய் ஏமாறிப் போவீர்கள்.

அந்த "உண்மை", தேர்தல் முடிந்த பிறகு, உண்மையாகவே "உங்களுக்குப் புரியும்...ஆனால், அதற்குள் உங்களின் "அரசியல் எதிர்காலமே" கேள்விக்குறியாகி விட்டிருக்கும்! எனவேதான் உங்களை மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறோம். கருநாடகத் தேர்தல் களத்தில் அத்தனை அரசியல் கட்சிகளின் வெற்றி தோல்விகளையும் தீர்மானித்-தலிலும், இதற்குமேல் தீர்மானிக்கப் போவதிலும், கருநாடகத் தமிழர்களின் பங்கு கணிசமானது—உறுதியானது - இறுதியானது! ஏனென்றால், இங்கே எங்களின் எண்ணிக்கை "42" இலக்கம் (12%) இதை மறவாதீர்கள். இப்படிக்கு,

தன்மானத் தமிழ் இளைஞர் கூட்டமைப்பு,
பெங்களூர்—51-

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவை பற்றியே அவன் இலக்கியத்தைச் சமைக்க முடியும். மார்க்சியத்தைப் பின்பற்றும் உணர்வுள்ளவனைத் திருக்குறளைப் பின்பற்றச் செய்ய முடியுமா? முடியாதது போல, ஓர் இயற்கைப் பாவலனை யாராலும் தன் கருத்துக்கு வளைந்து இலக்கியஞ்-செய் என்று சொல்ல முடியாது—என்பதை முதலில் நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் எனக்கு அயன்மையான கருத்தொன்றையும் நீ சொல்லி விடவில்லை. தேவையான பொழுது தேவையான அனைத்தையும் நான் இலக்கிய வழியாக வெளிப்படுத்துவேன்.

ஆனால், இவற்றைப் பற்றியெல்லாம் நீ எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிராமல், உன் சிந்தனைகளையும், ஆக்கங்களையும் பெருக்கிக் கொள். அறிவில் ஒளியேற்றிக் கொள். உன் ஆற்றலை நீயே எடையிட்டுப் பார். அதற்கேற்ப செயலைத் தேர்ந்தெடு. அதன் பயனை எண்ணு! மக்கள் அந்தப் பயனை உணரும்படி செய்! என்-நிலைகள் என்றும் எல்லாருக்கும் பயனுடையனவாகவே இருக்கும். நீ என்றும் எனக்கு மகனாகவே இரு. பிறபின்.

அனைவர்க்கும் என் அன்பும் வாழ்த்தும்!

அன்பு.
அப்பா.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். O

Scanned with CamScanner

அரசியல், மத நோக்குக் கொலைகள்!

எதையும், எப்படியும் பேசியாவது இன்றைக்கு இந்தியாவைத் தன் சுரண்டல், கொள்ளைக்காகக் காப்பதில் முனைப்புடன் இருக்கிறது இந்திய அரசு.

அதற்கு எதையும் விட இந்துமதவெறியும், பார்ப்பனியப் பண்பாட்டுச் சீரழிவும் இந்தியாவைக் கட்டிக் காக்கப் பெரிதும் பயன்படுகின்றன.

அந்த அடிப்படையில் இந்துமத வெறியைத் தூண்டிவிட்டு அதில் தனக்குச் சாய்கால் தேடிக் கொள்ள இருக்கிறார் இராசீவ்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலில் மூழ்கிய 'இலெமூரியாக்கண்டம்' எனும் குமரிக் கண்டம் பற்றி உலக அறிஞர் அனைவரும் ஒப்புக் கொண்ட பின்னரும், அதைப் பற்றிக் கவலைப் படாமல், ஏதோ 'வேதத்தில்' வந்துவிட்டது என்பதற்காக 'சரசுவதி'—ஆறு என்கிற ஓர் ஆறு வடநாட்டில் எங்கே பாய்ந்தது என்று ஆய்வு செய்ய ஒரு பெரும் குழுவையே ஏற்பாடு செய்து, அ'து இங்குதான் ஓடியது என்று ஓர் இடத்தையும் சுட்டிக் காட்டி, நிறைவு கொண்டது இந்த இந்து மதச் சார்பு அரசு.

அதன் அடிப்படையில் இன்றும் தொடர்ந்து. உ. பிரதேசத்தில் 'பாப்ரி மசூதி'-என்கிற மசூதி இருந்த இடம் இந்துக்களுக்குச் சேர வேண்டிய இடம் என்று தருக்கமிட்டு, அம் மசூதியை இடித்து விட்டு, இக்கால் அங்கு 'இராமன் கோயிலை'க் கட்டிக் கொண்டிருக்கிறது பார்ப்பன இந்துமத வெறிக் கூட்டம். அதற்கு முழு பக்கத் துணையாக இந்திய அரசு இயங்குகிறது.

அதைக் கருத்தளவில், போராட்ட அளவில் எதிர்த்த ஏராளமான சிறுபான்மை இசுலாமியர்கள் கொல்லப்பட்டனர்; சிறையில் அடைக்கப்பட்டனர்.

மதச் சார்பற்ற அரசு என்று சொல்லிக் கொள்ளுகிற இன்றைய இந்திய அரசு செய்கிற இந்து மத வெறிச்செயல் என்பது பார்த்த மட்டிலேயே தெரியக் கூடியது.

அன்றைக்கு, எத்தனையோ தமிழர்க்குச் சொந்தமான கோயில்களுக்குள் புகுந்து கொண்டு அவை அனைத்தையும் பறித்துக் கொண்டது மட்டும் அல்லாது—

சைவ, வைணவ சமயங்களை உட்செரித்து ஊதிப் பெருத்த வெறி அரக்கனாக இந்து மதத்தை உலவ விட்டதும் அல்லாமல்—

அவ்வெறித்தனத்தில், பிற மதச் சிறுபான்மையினரைக் கொலை செய்ததான நிலையில்— எட்டாயிரம் சமணக் குரவர்களைக் கழுவேற்றிக் கொன்ற கொடும் கொலைச் செயல்களோடு அல்லாமல்—

இந்து மத வெறிப் போர்வையில் பார்ப்பன வெறியர்கள் இன்றும் வலம் வந்து கொண்டிருப்பதற்கு எடுத்துக் காட்டே இந்த 'இராம ஜென்ம கோயில்.'

இந்த வகையில் மதவெறி பிடித்து இவர்கள் கொலை செய்வதும், பிற சிறுபான்மையினரின் நலன்களை அழிப்பதும், எந்த வகையிலும் 'பயங்கர வாதமாகவோ', 'தீவிரவாதமாகவோ, இந்த அரசால் காட்டப்படுவதில்லை.

ஆனால், இத்தகைய இந்துமத வெறி பிடித்தவர்களின் கொட்டங்களைத் தாங்க முடியாமல், அவர்களை எதிர்க்கிறவர்கள் அல்லது அழிக்கிறவர்கள் 'தீவிரவாதிகளாகவும்', 'பயங்கரவாதிகளாகவும்' இந்த அரசால் முத்திரை குத்தப் படுகின்றனர்.

இந்து மதவெறியும், பார்ப்பன வெறியும் கொண்ட தலைமை அமைச்சர் இந்திரா காந்தியைக் கொன்றதைப் 'பயங்கரவாத'த் தன்மையது என்று வரையறுக்கிற இந்த இந்துமத, இந்திய வெறி அரசு—

அவர் கொல்லப் பட்டார் என்பதற்காக ஒன்றுமறியாச் சீக்கியச் சிறுபான்மையர் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் தில்லிச் சாலைகளிலே படுகொலை செய்ததே—அது 'பயங்கரவாதம்'—இல்லையா?

அதே நிலை இன்றும் தொடரத்தானே செய்கிறது.

அண்மையில் இந்த இந்து மதவெறியில் கொட்டமடித்து இசுலாமியர்கள் கொல்லப்படுவதைக் கண்டு கொள்ளாத அரசு—

ஆனால் இந்த இந்து மத வெறியர்கள் 19-பேர் சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப் பட்டவுடன் ஏதோ மிகப் பெரும் கொடுமைச் செயலாகத் தானே விளம்பரப் படுத்துகிறது.

மக்கள் விடுதலைக்காக, மக்கள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற எவரும் இதை நன்கு உணர முடியும்.

ஆளுமை செலுத்துபவன் அழிப்பதற்கும்,

தன் அடிமைத் தளை அறுத்து உரிமை பெறப்போராடுபவன் அழிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு.

இதன் அடிப்படையில்,

அண்மையில், இந்து மத வெறி விழா ஒன்று பஞ்சாபில், பாட்டியாலா நகரில் நடந்தது. அதில் கலந்து கொள்ள வந்தவர்களே 'குருஷேத்திர', 'கான்பூர்'—கல்லூரி மாணவர்கள். அவர்கள் அனைவரும் பாட்டியாலா கல்லூரி விடுதியில் தங்கியிருந்தனர். அவ்விடுதியில் தங்கியிருந்தவர் மொத்தம் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள். ஆனால்

Scanned with CamScanner

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் குறிப்பிட்ட அந்த 19-மாணவர்களே! அந்த இந்து மத வெறி விழாவில் கலந்து கொண்ட அந்த இந்து வெறி மாணவர்களே!

அவர்களுள் ஒரு மாணவன் திருச்சியைச் சேர்ந்த பார்ப்பனன்.

அவன் ஒருவன் கொல்லப்பட்டான்—எனத் துடிக்கும் இந்திய,

இந்து வெறி அரசு—

இந்தியக் கூலிப்படையினரால் ஈழத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கொல்லப் பட்டனரே, அதற்கோ—நூற்றுக்கணக்கான பெண்கள் சீரழிக்கப்பட்டனரே, அதற்கோ—அசாமில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் குருதி வெள்ளம் ஓடக் கொல்லப்பட்டனரே அதற்கோ—தெலுங்கானாவில் நூற்றுக்கணக்கான உழவர்கள் கொல்லப்பட்டனரே அதற்கோ—

தமிழ்நாட்டில் இந்திச் சிக்கலுக்காக நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொல்லப் பட்டனரே அதற்கோ—கவலைப்படவே இல்லையே!

இந்தக் கொடுமைக் கொலைகள் இந்திய, இந்து மத நிலைப்புக்காகச் செய்யப்பட்ட கொலைகள்.

எனவே இக் கொலைகள் தேவை என்பதே இந்திய, இந்து மத வெறியர்களின் எண்ணம்.

அஃது அவர்களின் எண்ணமானால்,

அக்கொடுமைக் கொலைகள் செய்கிற இந்திய, இந்துமத வெறிக் கூட்டத்தின் ஆளுமையை அழிக்க,

பிற தேசிய இன மக்கள்,

அவர்களின் மதவழி உரிமைக்காக,

பொருளியல், அரசியல், குமுகவியல் உரிமைகளுக்காக அவ் வாளுமையரை எதிர்ப்பதும், அழிப்பதும் தேவையே என்றே உணரவேண்டியுள்ளது!

—விடுதலை விரும்பி.

பெரிதும் வருந்துகிறோம்!

கடந்த ஓராண்டுக் காலம், கொடைக்கானல் குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் இருந்த அன்பர் திரு. **இரா. பாண்டியன்** அவர்களின் தந்தையார் திரு. **டி.வி. இராமானுசம்** அவர்கள் உடல் நலிவுற்றிருந்து கடந்த **8-11-89** அன்று இரவு குருதியழுத்தத் தினால் திடுமெனக் காலமானார் என்பதைப் பெரும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அவர் பிரிவால் பெரிதும் துயருற்றிருக்கும் திரு. இரா. பாண்டியனுக்கும் அவர் உற்றத்திற்கும், சுற்றத்திற்கும் நம் நெஞ்சு நிறைந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர், **தமிழ்நிலம்.**

அயலகம் போன சாதிவெறி

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கட்கு வணக்கங்கள் பல.

தங்கள் அன்பிற்கும் அருநம்பிக்கைக்கும் உரிய பர்மா இரங்கூன் சா. மதியழகன் எழுதும் அன்பு மடல்.

தங்களின் தனித்தமிழ் ஏடுகளான **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** போன்ற முற்போக்கு இதழ்கள் எனக்கு வரவில்லை. தாங்கள் பெருமனது வைத்து அனுப்பி வைக்கக் கோருகிறேன். மொழிப்பற்று இனப்பற்று வளர்ச்சியடைய தங்களது தூய தமிழ் ஏடுகள் இங்குள்ள தமிழர்களுக்குப் பேருதவியாக இருக்கின்றது. ஆகையால் தாங்கள் அனுப்பி வைத்தால் எங்களுக்குப் பெரும் உதவியாகவும், இங்குள்ளவர்களிடையே தமிழ் ஆர்வத்தை வளர்க்க உறுதுணையாகவும் இருக்கும்.

இங்கே பர்மாவில் வாழும் தமிழர்களிடையே பிற்போக்குக் கொள்கைகள் முன்னோங்கி நிற்கின்றன; அஃதாவது சாதி என்னும் பேய் தலைவிரித்தாடுகிறது. இரங்கூன் மாநகரிலே எங்கே பார்த்தாலும் நம் தமிழர்கள் அவரவர் சாதியின் பெயரால் "சாதிச் சங்கங்களை" திறந்து வருகிறார்கள். "தமிழர்" என்று சொல்ல வெட்கப்படுபவர் போல் கவுண்டர், நாயுடு, பிள்ளை, கள்ளர், மறவர், அகம்படியர், கோனார், நாடார், செட்டி, வன்னியர், முதலி என்று என்னென்னவோ சொல்கிறார்கள். "தமிழன்" என்று தலைநிமிர்ந்து சொல்லும் ஓர் இனம், நாளடைவில் அழிந்து விடுமோ என்று அஞ்சுகிறேன்.

இப்போது சில நாள்களிலே சில சாதிச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. அதன் பட்டியலைத் தருகிறேன்; இதோ, -

1) அகில பாமர் இந்திரகுல கள்ளர்மகாசன சபை.
2) அகில பர்மா இந்திர குல அகம்படியர் ,, ,,
3) அகில பர்மா ராஜகுல அகம்படியர் சமயப் பேரவை.
4) அகில பர்மா யாதவர் மகாசன சபை.
5) அகில பர்மா நாயுடுகள் சம்மேளனம்.
6) அகில பர்மா ரெட்டியார்கள் சங்கம்.
7) அகில பர்மா இந்து நாடார் மகாசன சபை.
8) இரங்கூன் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தர்மபரிபாலன சபை.

மேற்கண்ட சங்கங்கள் ஒவ்வொரு நாளும் தோன்றி கொண்டே வருகின்றன. **தமிழ்நிலத்''**தில் இதை வெளியிடவும்.

—**சா. மதியழகன். இரங்கூன்.**

Scanned with CamScanner

கிறது. பட்டம் பெற்றவர்களும் அதற்கு மேலும் படித்தவர்களும் படிப்பாளிகளாக இருக்கிறார்கள். படிப்பாளிகளாக இருப்பவர்கள் எல்லாரையும் அறிவாளிகளாகக் கருத முடியாது. ஒருகால் அறிவாளிகளாக இருந்தாலும் தாங்கள் படித்த துறைகளில்தாம் அறிவாளிகளாக இருக்க முடியும். அதுவும் தவிர அவர்கள் நேர்மையானவர்களாகவோ நற்பண்பாளர்களாகவோ இருப்பார்கள் என்று கருத முடிவதில்லை. படிப்பு என்பதைப் பதவிக்கும் பணத்திற்கும் ஒரு வழியாகவே அமைத்துக் கொண்டனர். வாழ்க்கையே பதவிக்கும் பணத்திற்கும் என்றாக்கிக் கொண்ட பிறகு வேறென்ன செய்வார்கள்? ஞாயமல்லாததுகளும் நெறியல்லாததுகளும் படிக்காத எளிய மக்களால் ஏற்படுவது மிக மிகக் குறைவே. படித்தவர்களே எப்படிப்பட்ட கேடுகள் செய்யவும் அஞ்சுவதில்லை. இக் காலப் படிப்பு வாழ்வியல் நெறி முறைகளையும் நல்ல பண்புகளையும் வளர்க்கத் தவறி விட்டது என்று கூட கருத வேண்டியுள்ளது.

இப்படியான நிலையில் உழைப்பவன் எங்கே உயர முடியும்? உழைப்பவர்கள் ஓடாய்த் தேய்ந்து உருப்படாமல் போகக் கூடிய நிலையே உள்ளது. உழைப்பவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமில்லை. குறிப்பாக, உடலுழைப்பாளர்கள் மாந்த விலங்குகளாகவே கருதப்படுகிறார்கள் என்றே கூறி விடலாம். மெய்ம்மத்தில்(தத்துவத்தில்)—கோட்பாடுகளில் அவர்கள் எப்படிப் புகழப்பட்டாலும் உண்மை (யதார்த்த) நிலையில் மேற்கூறியவாறே கருதப் படுகிறார்கள். ஆனால் இக் குமுகாயத்தில் நிலவும் கேடுகளில் குறிப்பிடப்பட்ட ஒன்று—உழைப்பவனைப் போல நடிப்பவனுக்கோ ஆயிரக்கணக்கிலும் இலக்கக்கணக்கிலும் ஊதியம். ஆனால் கூழையும் கஞ்சியையும சாப்பிட்டுவிட்டுச் சேற்றிலே இடுப்பை வளைத்துக் கொண்டு உழைக்கும் ஓர் உழவர், பெண்மணிக்கு மிஞ்சிப் போனால் நாளைக்கு உரு 6/க்கு மேல் உறுதியாகக் கூலி இருக்காது. ஆனால் கழனிகள் எப்படி இருக்கும்? பயிர், பச்சையா சிவப்பா என்று கூடத் தெரியாத நிலையில் உள்ள நடிகனுக்கோ நடிகைக்கோ கருப்பிலும் வெள்ளையிலும் எத்தனை எத்தனை ஆயிரங்கள்! இலக்கங்கள்! யார் வந்து கேட்பது? கேட்டால் கலை-கலைப்பணி! கருப்புப் பண முதலைகளும் திருடர்களும் கலைக்காக உழைக்கிறார்களாம்; கலைக்குத் தொண்டு செய்கிறார்களாம். ஏழை, எளிய மக்களின் அறியாமையை வருவாயாகப் பயன்படுத்திக் கொள்ளும் இவர்கள் கலைத் தொண்டு செய்கிறார்களாம்! என்னே கொடுமை!

இக் குமுகாய இயக்கத்திற்கே காரணமாகவும் அடிப்படையாகவும் உள்ளவர்கள் உழைப்பாளர்கள்-தொழிலாளர்கள்—அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமில்லை. ஆனால் உழைப்பவனைப் போல நடிப்பவனுக்கு ஊதியமோ பல்லாயிரங்கள்! உண்மைக்கும் உழைப்புக்கும் இங்குள்ள மதிப்பே இவ்வளவுதான்! போலிகளும் பொய்ம்மைகளும் நாட்டிலே உயர்நிலையில்!

இதை விட வியப்பு என்னவென்றால் நடிகர்களையும் இயக்குநர்களையும் மற்றும் அத்துறையைச் சார்ந்தவர்களையும் கேட்டால் "திறமையால்-உழைப்பால்" முன்னுக்கு வந்ததாகக் கூறுகிறார்கள். ஒரு பேச்சிற்காக—இவர்கள் உழைப்பால் முன்னுக்கு வந்ததாக வைத்துக் கொண்டாலும்—ஆனால் அவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உழைக்கும் ஒரு குப்பனோ, சுப்பனோ அல்லது ஒரு முனியம்மாவோ, பச்சையம்மாவோ ஏன் முன்னுக்கு வர முடியவில்லை? அவர்களெல்லாரும் உழைக்காமலா இருக்கிறார்கள்? உழைப்பவர்கள் எல்லாரும் இந்த நாட்டில் முன்னுக்கு வர முடியும் என்றால்—உழைப்புக்கு உண்மையாகவே மதிப்பிருக்கிறது என்றால்— இந்நாட்டு வேளாண்மை—உழவர்—(விவசாய) பெருங்குடி மக்களும், தொழிலாளர்களும் முன்னுக்கு வந்திருக்க வேண்டுமே! இந்நாட்டில் பெருவாரியாக உள்ள அவர்களே ஆட்சியிலும் அரசிலும் கோலோச்சிக் கொண்டிருக்க வேண்டுமே! ஆனால் நிலைமை தலைகீழாக உள்ளதே,

இந்நாட்டில் உழைப்பும் திறமையும் பிறரையும் இக் குமுகத்தையும் ஏதாவது ஒரு வகையிலாவது சுரண்டுவதாகவும் அல்லது ஏமாற்றுவதாகவும அமைந்தாலொழிய, உண்மையான—நேர்மையான—உழைப்புக்கும் திறமை மதிப்பிருப்பதாகத் தெரியவில்லை. இவ்விடத்தின்கண் இன்னொன்றையும் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறாகப் பெருஞ்செல்வர்களும் வணிகர்களும் தங்கள் வணிகத்தைக் குறிப்பிட்ட காலம் செய்து விட்டாலே பல தலைமுறைகளுக்குத் தேவையான சொத்தையும் பொருளையும் ஈட்டி விடுகின்றார்கள். ஆனால் உழைப்பவன் சாகும்வரை உழைத்தே உயிர் வாழ வேண்டிய அவலநிலையில் தொல்லைப் படுகின்றார்கள். இவையெல்லாம் கண்ணெதிரே நடக்கும் கொடுமைகளாக இருந்தும் அரசோ சட்டமோ தடுக்க முடியவில்லை.

தனிப்பட்ட ஒருவரிடம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் சொத்தும் பொருளும் குவிவதைத் தடுப்பதற்கு சட்டம் இருந்தும் ஒன்றும் அவர்களைச் செய்ய முடியவில்லையே! என்னதான் அவர்கள் உழைப்பதாகக் கொண்டாலும், ஆயிரக்கணக்கான கோடி உருவாக்கள் ஈட்டும் அளவிற்கா உழைக்கிறார்கள்? மற்றவர்கள் (தொழிலாளர்கள்) தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்குக் கூடவா உழைக்கவில்லை? அதனால்தான் சாகும் வரை உழைத்தே சாகின்றார்களா? இந்நாட்டுக்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்)

பறம்பை அறிவன் பக்கம் !

1. அறிவியல் பற்றி...!

அறிவியல் இயக்கம்-தேவைதான். மறுப்பில்லை. அதிகமான உருவாக்கம் (உற்பத்தி)வேண்டும்தான். அறிவியல் கருவி வளர்ச்சி கொண்டும் பெருமை பெறுகின்றது. ஆனால், மக்களின் அறிவு-வளர்ச்சி முன்னேற்றம் 'சாராத' அறிவியல் முன்னேறுது— அது தேவைதானு என்ற வினவும் எழுகிறது!

முன்னேற்றமான—மக்களுக்கான அறிவியல் வேண்டும் என்பதே நம் நோக்கம் ஆகும்! அப்படியானல், அம்மை ஒழிப்பு- பாராட்டுவோம்; அறியாமை ஒழிந்ததென மகிழ்ந்தோம். ஆனல், 'தலைவலி' மருந்துகளையும், பணக்கார நோய் தீர்க்கும் மருந்துகளையும் பார்க்கிறோம்!

கொள்ளை நோக்கில் உருவாக்கம் பெற்ற பல 'மாத்திரைகள்' தீங்கானவை என உலக நிறுவனம் தடை செய்துள்ளது! இதனைக் குறித்து இந்த அறிவியல் இயக்கம் என்ன கருதிக் கொண்டிருக்கிறது; என்ன செய்து கொண்டிருக்கிறது? விளக்கம் வேண்டும்!

ஏதோ, இவர்கள் எல்லாம் அறிவியல் பக்கம் நிற்பவர்களாகவும், நாம் எதிர்ப்பக்கம் 'மடமை உரை' செய்பவர்களாகவும் பேசுகிருர்கள்! நாம் 'மக்கள் பக்கம்' அறிவியல்-இயக்கம்-இருக்க வேண்டும் என்கிறோம்!

அவர்கள் 'பணக்காரர்களும்' மக்கள் என்று கூறுகிருர்கள். 'மாந்தநேயம்' பற்றிப் பேசும் இவர்கள், 'வகுப்பு'க் கிளர்ச்சி (Class Strugle) பற்றிய 'மார்க்சின் உள்ளம்' அறியாதவர்கள் என்றல் என்ன கெட்டு விடும்?

2. பணம் புழங்கிடங்களில் கையூட்டு!

பணம் புழங்குமிடங்களே ஊழலையும், சுரண்டலையும் தீவிரப் படுத்துகின்றன. கூட்டுறவு இணயங்கள் கொள்ளையடிப்பகங்களாக மாறி வருகின்றன. சொத்துப் பற்று, கொடுக்கல், வாங்கல் எல்லாம் ஊழல் சுரப்பிடங்களாக உள்ளன. அரசின் சட்ட திட்டங்கள், தவிடு பொடியாகின்ற இந்த இடங்களை யாரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

கருவூலங்களில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பணமாற்று ஓலைகளைச் செலுத்தவும், பணம் பெறவும் கையூட்டுத் தர வேண்டியவர்களாக உள்ளார்கள். பணம் செய்யும் இந்தப் பேரிழிவு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது எங்ஙனம்?

'ஊழலை ஒழிப்போம்' என்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவர்கள், ஊழலில் நீந்தி உவகை கண்டு வருகின்றனர்.

ஆவணப் பதிவிடங்களில் நடக்கும் கையூட்டு ஊரறிந்த செய்தியாகும். அங்கே, காதல் திருமணங்களும் காசின்றேல் பதிவு ஆவதில்லை. கறுப்புப் பணக்காரர்கள் அடிதண்டமாக வாங்கும் சொத்துகள் இங்கே அரசின் முத்திரை பெறுகின்றன. வருமான வரி, நிலவரி என்று, எந்த வரி கட்டுத் துறைகளிலும் கையூட்டுக் கொடி கட்டிப் பறக்கவே செய்கின்றது.

வேலை வாய்ப்பு நிறுவனங்களில் முன் பதிவுரிமை பெற நடக்கும் தரகுகளுக்கு அளவே இல்லை!

''அதிகாரம்'' பெற்ற அனைத்துத் துறைகளிலும், ஆள்களிடமும், கைகட்டி நிற்கும், காத்துக் கிடக்கும் அடிமைத்தனங்களை அகற்றிடல் எப்படியோ?

அடிமைகள், தங்களை அடிமைகள் என்று உணர்ந்து ஒன்றிணைந்து,அடிமை நீக்கத்திற்காகத் தங்களை ஈகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அப்போதே, இந்த அவலங்கள் ஒழியும்!

3' உண்மை உணர்வற்றவர் பலர்!

இரா. எழில், (முகவை இரா சுந்தர்) இவர் முகவை முரசு' என்ற 'விளம்பர இதழ்' நடத்தி வருபவர். தொடக்கத்தில்—'தமிழ்நிலம்' கையெழுத் தேட்டினர் கழகம் அறிவனன்புமலர் தலைமையில் நடத்திய காலத்தில், **தென்மொழி**, **தமிழ்ச்சிட்டு**, களில் ஈடுபாடு கொண்டிருந்தார். பிறகு தி.மு.க. வானர். இன்று திரைப்படத்தை உருவாக்கப் பொறுப்புடையவராக (Production Manager) உள்ளார். 'தென்றலே நீ பேசு' படம் இவர் பொறுப்பில் முடிந்து விட்டதென்ருர். தெலுங்குப் படம் தமிழ்ப் படுத்தப் படுகிறது என அறிகிறேன்.

ஆம்! நம் ஆற்றல்கள் எங்கெங்கோ ஒடி அலை மோதிக் கொண்டிருக்கின்றன. **'தென்மொழி'** இதழ்களைக் கைகளில் ஏந்திக் கல்லூரி மாணவர்களிடம் பெருமையோடு பரப்பிய கா. காளிமுத்து செயலலிதா பின்னே...''அதுவும் அவரை 'மானங்கெட'ப் பேசி வந்தவர், இந்த நிலையில் உள்ளாரே!'' என்ருர் பொன்னரசன்.

'உண்மையுணர்வற்றவர் - மேற்போக்கானவர் என்றே அன்றும் பலர் இருந்திருப்பார்' என்ருர் தமிழரசு!

4. நிகழ்கால வரலாறு என்பதற்காக...!

ஏழாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில் 'எம்.சி.ஆர்' பற்றிய கட்டுரை உள்ளது. அதில் அவர் பாடிய பாடல்கள் எனத் திரைப்படப் பாடல்கள் மேற்கோள்களாக வருகின்றன. அவற்றின் தடத்தில் நடந்த தலைவர் என்னும் நம்பிக்கையூட்டப் படுகின்றது!

நிகழ்கால வரலாறு வேண்டும்தான். அதில் கூறப்படும் குறைவான செய்திகளையும் சரியாகச்

சொல்லலாம்! ஒரு பக்கப் பார்வையானாலும் கூடச் சரியாக எடுத்துக் கூறினாலே மாணவர்கள் திட்டவட்டமாகப் புரிதலுக்கு வருதல் முடியும். 'மறு பக்கங்கள்' கூறுவதற்கு உரியன அல்ல எனில் தவிர்ப்பது ஓர் அரசின் இயல்புதான்!

அரசுச் சார்பில் சிந்திப்பதும் 'முறை'யாக இருக்க வேண்டும் என்று சுட்டிச் காட்டுவது ஆசிரியர்களின் 'குறைந்த அளவு'க் கொள்கையாதல் வேண்டும்!

5. கல்வியின் தரம் தாழ்கிறது!

'கல்வியின் தரம் குறைவது பற்றி ஆளுநர் கவலை' என்ற தினமணிச் செய்தி புதுமையானதன்று. இச் செய்தி (தினமணி 4-8-89) பல்கலைக் கழகங்களின் தரம்பற்றியது" என்பதால், மற்ற கல்வி நிறுவனத்தைச் சார்ந்தவர் கண்டுகொள்ளாமல் இருத்தல் இயலாது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் ஒரு நாள் மாநாடு (2-8-89) சென்னையில் நடந்துள்ளது. இம் மாநாடு பற்றிய செய்தியில் குறிப்பிட்டுள்ள சிக்கல்களை நாமும் தெரிந்து சிந்திப்பது நல்லது தானே!

— தமிழகத்தில் சில பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் தேர்ச்சி அளவு மிக மிகக் குறைந்து—தரம் தாழ்ந்துள்ள காரணங்களை குறைபாடுகளைக் கண்டறிந்து களையத் துணைவேந்தர்கள்—இயக்குநர்கள் உரிய வழி வகைகளைக் காணுதல் வேண்டும்"

— குறிப்பிட்ட சில பட்டப்படிப்புத் தேர்வுகளில் தேர்ச்சி அளவு மிகத்தாழ்வு - சென்னைப் பல்கலைக் கழகம் மே 1989 தேர்வில் முதுகலை வேதியியல் (M.Sc-chemistry) முதலாண்டு மாணவர் தேர்ச்சி 9%—இரண்டாவது ஆண்டுத் தேர்ச்சி 7·5% கணிதப் பிரிவில் (M.Sc. Maths) முதலாம் ஆண்டில் தேர்ச்சி 11.8%

— முதுகலை-பொருளியல், தமிழ் ஆகிய பாடங்களில் கல்வித் திறன் மிகத் தாழ்வு.

— இளங்கலை (பி.ஏ) பட்டப் படிப்பில் இரண்டு அரசினர் கல்லூரிகள் மூன்று தனியார் கல்லூரிகள் தேர்ச்சி அளவு பத்து விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தது.

— அறி.இ.(பி. எசி.) தேர்வில் நான்கு அரசின் கல்லூரிகள் ஒரு தனியார் கல்லூரி மாணவர் தேர்ச்சி 10 விழுக்காட்டிற்குத்தான் இருந்தது.

— பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட ஒரு கல்லூரியில் தேர்ச்சி—சுண்ணமே—(பூச்சியமே.)

— அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தின் மூலம் உயர்கல்வியைக் கற்பிக்கும் முறையை வரவேற்கிறேன்.

— படிப்பவர்க்குப் பாடப் புத்தகங்கள் சரி வர அனுப்பப் படுகின்றனவா? கல்வி-செயல்திறன் மதிப்பீடு செய்யும் பணிகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா—என ஆராய வேண்டும்.

— கல். இ. (பி. எட்.) பட்டத்துக்கு மராட்டிய அரசு தனது ஏற்பினை விலக்கி உள்ளது.

— வேதியல், இயற்பியல், கணிதம்...முதுகலை அஞ்சல் வழிக் கல்வி சரியன்று.

— பொதுத் தேர்வுகளுக்கு முன்னதாக அந்தந்தக் கல்வி நிறுவனங்கள் முன் மாதிரித் தேர்வுகளை நடத்தும் ஏற்பாடு மீண்டும் நடைமுறைப் படுத்தப் படல் வேண்டும். இதனால் தேர்வுகளை எளிதாக எழுத இயலும்.

6. திறப்பாடிலாதவர்!

"படிக்க மாட்டோம்; பட்டம் மட்டும் வேண்டும்" என்ற மனப்பான்மை மாணவர்களிடையே வளர்ந்து வருவதும், அதைத் தடுக்கக் கல்வியாளர்களும் அரசும் நடவடிக்கை எடுக்காதிருப்பதும் வருந்தத் தக்கன."

தினமணி 'தரம் தாழ்ந்தது'—10-8-1989.

மாணவர் பட்டம் வேண்டாம்; வேலை வேண்டும்; சோறு வேண்டும் என்று கிளம்பியிருப்பதைத் தினமணி சுட்டிக் காட்டியிருத்தல் வேண்டும். அதை விட்டு விட்டுக் 'தரம்' தேடி அலைகின்றனர். அரசுப்பள்ளி தரமற்றது; தனியார் பள்ளி தரம் உயர்ந்தது' என்று பிளவு படுத்தும் சூழ்ச்சிகள் ஒரு பக்கம், ஒட்டு மொத்தமாய்த் 'தரம்' போய் விட்டது எனப் புலம்புவது ஒரு பக்கம்-இவையெல்லாம்...

முறைப்பட சூழ்ந்தும்...முடிவிலவே செய்யும் திறப்பாடில்லாத அரசு என்ற குற்றச்சாட்டிற்கு இலக்காவது உறுதி!

முதலாளிய அரசின் அடக்குமுறைகளின் தோல்வி பற்றியும், உரிமைப் போராட்டங்களின் வெற்றி பற்றியும் மாவோ!

தொல்லை தருவது, தோல்வியடைவது, மீண்டும் தொல்லை தருவது, மீண்டும் தோல்வியடைவது—இப்படியே அழிந்து போகும் வரை தொடர்வது—இதுதான் மக்களுக்கு எதிராக அனைத்ததிகார வல்லரசியங்கள் மற்றும் பிற்போக்கு ஆட்சியாளர்கள் எடுக்கும் நடவடிக்கைகளின் நெறி.

மாறுக, போராடுவது, தோல்வியடைவது மீண்டும் போராடுவது, மீண்டும் தோல்வியடையவது, மீண்டும் போராடுவது—இப்படியே வெற்றியடையும் வரை தொடர்வது—இதுதான் மக்களின் உரிமைப் போராட்டங்களின் நெறி. மாவோ.

குமுகப் பொருளியல் நிலைமைகள் எவ்வளவு கீழ்மை-யாக-இழிவாக உள்ளன என்பதை இது போன்ற நிலைகளால் நாம் நன்கறிந்து கொள்ளலாம்.

இவற்றிற்கெல்லாம் உண்மையாகவே நல்ல-தொரு முடிவு காண வேண்டுமென்றால் அடிப்படை-யிலிருந்தே மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். வேறு வகையாகக் கூறினால் தலைகீழ்ப்புரட்சி ஏற்-பட்டாக வேண்டும். குமுகப்பொருளியல் சீர்கேடு-களைக் களைய வேண்டுமென்றால் அவற்றின் ஆணி-வேரையே அழிக்க வேண்டும். இன்றேல் அவற்றை ஒழிக்க நினைத்து எடுக்கும் சில நல்ல முயற்சிகளும் இடைக்காலத் தீர்வாகப் பயன்படுமே தவிர அவற்றைமுற்றிலும் அழித்தொழிக்கப்பயன்படாது,

மேலும், மாந்தன் ஒருவனின் அல்லது ஒரு நல்ல அமைப்பின் சிந்தனை "பொதுவுடைமை—பொதுவுரிமை" பெறுவதில்தான் முடியவேண்டும். அந்நிலையே மிக உயர்ந்த நிலை. புரட்சிப் பாவலர் கூறியுள்ளதையும் இங்கே நோக்கத் தக்கது.

"புவியை நடத்து-பொதுவில் நடத்து" என்ற வரி இவ்வுண்மையை விளக்கிக் காட்டுகிறது.

அப்படியானதொரு நல்ல நிலைமை ஏற்படப் பொது மக்களிடையே நல்ல அறிவுப் பரப்புதல் செய்ய வேண்டும். வெறும் கருத்துப் பரப்புதல் மட்டும் போதாது. கருத்துப் பரப்புதலுடன் கூடிய வினைப்பாடும் செயல் திட்டமும் வேண்டும். இவற்-றையெல்லாம் நிறைவேற்ற தாங்கள் கூறியுள்ள-தைப் போல எத்தனை இடர்வரினும் மக்கள் நலங் காணும் பொருட்டு மீறிச் செயல்படுகின்ற நல்ல தலைவர்கள் வேண்டும். இப்படிப்பட்ட நல்ல முயற்சிகளை—கொள்கைகளை—செயல்படுத்த எவ்-வகை அச்சமும், தயக்கமும் இன்றி அரசும் முன் வர வேண்டும். இந்நிலைகள் ஏற்படாவிட்டால் உழைப்பவர்களும் தொழிலாளர்களும் ஏழை மக்களும் உழைத்து உழைத்து உருப்படாமல் போகும் நிலைமைகள் தாமிருக்கும். இ'து உறுதி.

இன்னொன்றையும் மாந்தன் ஒவ்வொருவனும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மாந்தன் ஒரு குமுகாய விலங்கு. அவன் தனித்து வாழ இயலாது. இக்குமுகாயத்தின் உதவியோடு வாழும் அவன், இக் குமுகாயத்தில் நல்லவனாக நடந்துக் கொள்ள வேண்டும். முடிந்தால் பிறருக்கு நன்மைகள் செய்ய வேண்டும். மாந்தன் ஒவ்வொரு-வனும் படிப்பதையும் பொருள் ஈட்டுவதையும் எபபடி வாழ்வியல் கடமைகளாகக் கொள்கின்றானோ அதைப் போலவே இக்குமுகத்திற்கும் நன்மைகள் செய்ய வேண்டிய கடமையையும் கொண்டுள்ளான் எனபதை உணர வேண்டும். அதை இக் குமுகாய-மும் அவனிடம் எதிர்பார்க்கிறது. அது மனிதன் ஒவ்வொருவனுக்கும் இயற்கையாக முறைப்படுத்தப் பட்ட கடமை என்று கூடக் கொள்ளலாம். (It is his implied duty). அப்படி மாந்தன் ஒவ்-வொருவனும் நடந்து கொண்டால் ஒழுக்க-மானதொரு குமுகாயம் ஏற்படவும் வழி உள்ளது.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை வெறும் கவர்ச்சித் திட்டங்களால் ஏமாற்றிய தன்மை, போலித் தமிழ்ப் பற்று—ஆகியவையே கலைஞரின் எதிரிகளாக இருந்து அவரை வீழ்த்தியிருக்கின்றன என்று சொன்னால் அது தவறாகாது. பிறவற்றைப் பிறகு பார்க்கலாம்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு • 48

உண்மையான அரசியல் நடைமுறையில் அடக்கமிருக்கும்; ஆரவாரம் இராது. உறுதி இருக்கும்; ஆணவம் இராது. கருத்து இருக்-கும்; கவர்ச்சி இராது!

(தம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 131.

நூல் அஞ்சல்

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு: 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.